සියලුම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / ***All rights Reserved***

මතුගම අධ්‍යාපන කලාපය மத்துகம கல்வி வலயம் මතුගම අධ්‍යාපන කලාපය மத்துகம கல்வி வலயம் මතුගම අධ්‍යාපන කලාපය மத்துகம கல்வி வலயம் මතුගම අධ්‍යාපන කලාපය மத்துகம கல்வி வலயம் මතුගම අධ්‍යාපන කලාපය மத்துகம கல்வி வலயம் මතුගම අධ්‍යාපන කලාපය மத்துகம கல்வி வலயம் මතුගම අධ්‍යාපන කලාපය மத்துகம கல்வி வலயம் මතුගම අධ්‍යාපන කලාපය மத்துகம கல்வி வலயம் මතුගම අධ්‍යාපන කලාපය

**மத்துகம கல்வி வலயம்**

# இரண்டாம் தவணை பரீட்சை – 2023

| தரம் :- 09 | பாடம் :- வரலாறு | வினாப்பத்திரம் I , II | நேரம் :- 02 மணித்தியாலங்கள் |
|---|---|---|---|

பெயர் :- ..........................................................................................................................................................

**மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

1. இந்நாட்டுக்கு வருகை தந்த முதலாவது ஒல்லாந்து தளபதி யார்?
   1. சி பெல் த வாட்　　2. ஜொரிஸ்வான்த ஸ்பில் பேர்ஜன்
   3. ஜோன் பைபஸ்　　4. ஜெரால்ட் ஹல்ப்ஸ்

2. **"இஞ்சி கொடுத்து மிளகாய் வாங்கியது போல"** எனும் கூற்றுடன் தொடர்புடைய அரசன் யார்?
   1. செனரத்　　2. முதலாம் விமலதர்ம சூரியன்
   3. இரண்டாம் இராஜசிங்கன்　　3. முதலாம் இராஜசிங்கன்

3. குண்டசாலை இளவரசன் என அழைக்கப்பட்ட மன்னன் யார்?
   1. 2ஆம் விமலதர்ம சூரியன்　　2. இரண்டாம் இராஜசிங்கன்
   3. ஸ்ரீ வீர பராக்கிரம நரேந்திர சிங்கன்　　4. செனரத் மன்னன்

4. பின்வருவனவற்றுள் கிபி 1848 இரண்டாம் சுதந்திர போராட்டத்திற்கு வழிவகுத்த புதிய வரிமுறைகளை தெரிவு செய்க.
   A. மீன் வரி　　B. ஆள்வரி　　C. உப்பு வரி　　D. கடை வரி
   E. வண்டி வரி　　F. புகையிலை வரி

   1. BDE　　2. ACD　　3. BCF　　4. ABF

5. காலி ரிச்மனட் கல்லூரியை அமைத்த மிஷனரி இயக்கம் எது?
   1. சர்ச் மிஷனரி இயக்கம்　　2. அமெரிக்க மிஷனரி இயக்கம்
   3. பெப்டிஸ் மிஷனரி இயக்கம்　　4. வெஸ்லியன் மிஷனரி இயக்கம்

6. இந்து சமுத்திரத்தில் தமது வர்த்தகத்தை கட்டியெழுப்பும் போது ஒல்லாந்தர்க்கு யாருடன் மோத வேண்டிய தேவை ஏற்பட்டது?
   1. போர்த்துகேயருடன்　　2. ஆங்கிலேயருடன்
   3. முஸ்லிம்களுடன்　　4. இந்தியர்களுடன்

7. குற்றச்செயல் தொடர்பான வழக்குகளுக்கு தீர்ப்பு வழங்க உருவாக்கப்பட்ட நீதிமன்ற தொகுதி எது?
   1. ரான்வாத் ஜஸ்டிட்　　2. சிவில் ராத் நீதிமன்றம்
   3. லான்ராத் நீதிமன்றம்　　4. பிஸ்கல் நீதிமன்றம்

8. ஒல்லாந்தர் ஆட்சி காலத்தில் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றங்களுல் உள்ளடங்காத விடை எது?
   1. மகாபத்தே திணைக்களம் ஒல்லாந்தரால் தனிப்பட்ட கப்பித்தான் ஒருவரின் கீழ் கொண்டுவரப்பட்டது.
   2. தோம்பு முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டமை.
   3. சமயத்தை பரப்ப ஸ்கோல் எனும் விசேட நிறுவனம் ஒன்றை ஆரம்பித்தமை.
   4. முத்துராஜாவெலையை விளைநிலமாக்க நடவடிக்கை எடுத்தமை.

9. திஸ்ஸமகாராம குளத்தை புணரமைத்த ஆங்கிலேய ஆளுநர் யார்?
   1. ஆதர் கோடன்　　2. ஹேர்க்கியூலஸ் ரொபீன்சன்　　3. ஹென்றி வாட்　　4. வில்லியம் கிரிகெரி

10. பின்வருவனவற்றுள் பிரான்சியரால் இந்தியாவில் நிறுவப்பட்ட கோட்டைகளில் உள்ளடங்காதது எது?
1. பாண்டிச்சேரி 2. காரைக்கால் 3. சந்திரநாகூர் 4. மும்பை

11. கண்டி ஒப்பந்தத்தில் ஐந்தாம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயமாவது.
1. பௌத்த மதமும் பௌத்த குருமார்களும் ஸ்தோபிகளும் பேணிப் பாதுகாக்கப்படுவது பற்றியதாகும்
2. அங்கவீணப்படுத்தும் பழைய தண்டனை முறைகள் ஒழிப்பது பற்றியதாகும்
3. ஸ்ரீ விக்ரம இராஜசிங்க மன்னன் அரியணையிலிருந்து நீக்கப்பட்டது பற்றியதாகும்
4. பிரபுக்களினது பதவிகளும் உரிமைகளும் பாதுகாக்கப்படுதல் பற்றியதாகும்

12. A. பெலி என்பவரின் தலைமையில் விசாரணை குழு ஒன்று நியமிக்கப்பட்டமை.
B. கண்டி பிரகடனம் மூலம் ஆங்கிலேயரின் அதிகாரம் உறுதி செய்யப்பட்டமை.
C. எஹெலபொல உள்ளிட்ட குழுவினர் மொரீசியஸ் தீவுக்கு நாடு கடத்தப்பட்டமை.
D. குடியேற்ற நாட்டு செயலாளர் எமர்சன் டெனன்ட் என்போர் பதவி நீக்கம்.
மேற்கூறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் 1848 ஆம் ஆண்டு சுதந்திரப் போராட்டத்திற்கு வழிவகுத்த காரணிகளை மட்டும் கொண்ட விடைத்தொகுதி.
1. AD 2. BD 3. AC 4. CB

13. உதவி ஒப்பந்த முறையில் கீழ் இந்தியாவில் ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்டு இடங்கள் பின்வருமவற்றுள் எவை என்பதை தெரிவு செய்க?
1. மும்பை, ஹைதராபாத் 2. மைசூர், ஹைதராபாத்
3. குஜராத், ஹைதராபாத் 4. பீகார், ஹைதராபாத்

**14,15,16,17 வினாக்களுக்கு கீழ்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.**
A. அனி பெசன்ட் B. பால கங்காதர திலகர் C. பிபின் சந்திரபோல் D. லால் ராய்
E. தாதாபாய் நவோர்ஜி F. மகாத்மா காந்தி G. W,C பேனர்ஜி H. மாங்கள் பாண்டே

14. இந்திய தேசிய சங்கத்தின் முதலாவது தலைவர் யார்?
1. A 2. B 3. E 4. G

15. சுயாட்சி எண்ணக்கருவை ஊக்குவித்த தலைவர்களாக காணப்பட்டோர்.
1. AD 2. FG 3. CE 4. AB

16. தேசிய சங்கத்தின் காணப்பட்ட தீவிரவாத கொள்கையுடைய தலைவர்களாக விளங்கிய நபர்கள்.
1. BCD 2. CEF 3. ABC 4. CDF

17. ஆங்கில படையதிகாரி மீது துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்ட சிப்பாய் யார்?
1. E 2. D 3. H 4. A

18. ஆங்கிலேயர் இந்தியாவுக்கு வரும்போது மொகலாய பேரரசின் ஆட்சியாளனாக விளங்கியவன் யார்?
1. ஔரங்க சிப்பி 2. ஜஹாங்கிரின் 3. ஷாஜகான் 4. மகா அக்பர்


19. கிபி 1873இல் மாளிகாகந்து வித்யோதய பிரிவெனாவை உருவாக்கிய தேரர் யார்?
1. ஹிக்கடுவ ஸ்ரீ சுமங்கல தேரர் 2. வாரிய பொல ஸ்ரீ சுமங்கல தேரர்
3. வஸ்கடுவே சுபூதி தேரர் 4. மீகெடுவத்த குணானந்த தேரர்

20. **சிங்கள பௌத்தயா** எனும் பத்திரிகையை ஆரம்பித்தவர் யார்?
1. ஜோன்த சில்வா 2. பியதாச சிரிசேன 3. அநகாரிக தர்மபால 4. டி பி ஜயதிலக

( 2 x 20 = 40 புள்ளிகள் )

## பகுதி - II

**முதலாம் வினா கட்டாயமானது.**
ஏனைய வினாக்களில் இருந்து நான்கு வினாக்களை தெரிவு செய்யவும்.
எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.




1) I. மேலே உள்ள படத்தினை அடிப்படையாகக் கொண்டு கீழ் வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. கள்ளிக்கோட்டையை குறிக்கும் எழுத்தினை குறிப்பிடுக?
2. போர்த்துக்கேயரின் கீழைத்தேய மத்திய நிலையமாக காணப்பட்ட கோவாவை குறிக்கும் எழுத்து எது?
3. கிபி 1761 இல் பிரித்தானியரால் பிரான்சியரிடமிருந்து கைப்பற்றப்பட்ட பாண்டிச்சேரியை குறிக்கும் எழுத்து எது?
4. 1668 ஆம் ஆண்டில் பிரான்சியரால் வர்த்தக கலஞ்சியசாலை ஒன்றை நிறுவிக்கொள்ளப்பட்ட சூரத் எனும் இடத்தினை குறிக்கும் எழுத்து எது?

II.



1. படத்தில் காணப்படும் நபர் யார்?
2. அவரின் தலைமையில் உருவாக்கப்பட்ட சங்கம் எது?
3. இவர் எந்த நாட்டை சேர்ந்தவர்?
4. இவரால் பௌத்த சமயத்திற்கு ஆற்றப்பட்ட சேவைகளுள் ஒன்றினை குறிப்பிடுக?

III. பின்வரும் சம்பவங்களுடன் தொடர்புடைய நபர்களை குறிப்பிடுக.

1. யாழ்ப்பாண சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவியவர் யார்?
2. ஐம்பெரும் விவாதங்களுக்கு தலைமை தாங்கிய பிக்குவின் பெயரை குறிப்பிடுக?
3. கொழும்பு சாஹிரா கல்லூரியை நிறுவியவர் யார்?
4. படித்து இலங்கையர் என்ற அடிப்படையில் முதலாவது பிரதிநிதியாக சட்டவாக்க கழகத்திற்கு தெரிவானவர் யார்?

( 1 x 12 = 12 புள்ளிகள் )

2) 1. a. இலங்கையில் இறுதி ஒல்லாந்த ஆளுநர் யார்?

b. கண்டி ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட ஆங்கிலேய ஆளுநர் யார்?

2. கிபி 1797 ஆம் ஆண்டு கரையோர கழகம் ஏற்பட ஏதுவான காரணிகள் இரண்டை குறிப்பிடுக?

3. கிபி 1818 ஆம் ஆண்டு முதலாம் சுதந்திரப் போராட்டம் ஏற்பட ஏதுவான காரணிகள் மூன்றினை விளக்குக.

( 2 +4+ 6 = 12 புள்ளிகள் )

3) 1. ஐம்பெரும் விவாதங்களில் இரண்டை குறிப்பிடுக?

2. பௌத்த சமய மறுமலர்ச்சிக்காக தலைவர்களால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் நான்கினை குறிப்பிடுக?

3. பௌத்து மறுமலர்ச்சி இயக்க தலைவர்கள் இருவரை குறிப்பிட்டு, அவர்களின் செயல்பாடுகள் மூன்றினை குறிப்பிடுக?

( 2 +4+ 6 = 12 புள்ளிகள் )

4) 1. பிரதானியர் ஆட்சி காலத்தில் கிறிஸ்தவ சமயத்தை பரப்ப வந்த மிஷனரி இயக்கங்கள் இரண்டை குறிப்பிடுக?

2. மிஷனரி இயக்கங்கள் கிறிஸ்தவ சமயத்தை பரப்ப கையாண்ட ஊடகங்கள் இரண்டினை எழுதுக?

3. மிஷனரி இயக்கங்கள் தமது சமயத்தை பரப்ப மேற்கொண்ட செயல்பாடுகள் இரண்டினை விளக்குக?

( 2 +4+ 6 = 12 புள்ளிகள் )

5) 1. தேசிய விவசாயத்தை மேம்படுத்துவதற்கு முயற்சிகளை மேற்கொண்ட பிரித்தானிய ஆளுநர்கள் இருவரை குறிப்பிடுக?

2. தேயிலை செய்கை இந்நாட்டில் முக்கியமான பொருளாதார பயிராக மாற்றம் அடைவதில் செல்வாக்கு செலுத்திய காரணிகள் இரண்டை குறிப்பிடுக?

3. இறப்பர் செய்கை விருத்தியில் பங்களிப்பு செய்த காரணிகள் மூன்றினை குறிப்பிடுக?

( 2 +4+ 6 = 12 புள்ளிகள் )

6) 1. a. பிரித்தானியரின் கண்டி மீதான முதலாவது படையெடுப்பு எத்தனையாம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது?

b. 185இல் இலங்கைக்கு நியமனம் பெற்று வந்த ஆங்கிலேய ஆளுநர் யார்?

2. கண்டி இராச்சியத்தில் அரசனுக்கும் பௌத்த குருமார்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட ஏதுவான காரணிகள் இரண்டை குறிப்பிடுக?

3. கண்டி இராச்சியத்தை கைப்பற்றிக் கொள்வதற்காக பிரித்தானியரால் மேற்கொள்ளப்பட்ட உபாயங்கள் இரண்டினை விளக்குக?

( 2 +4+ 6 = 12 புள்ளிகள் )

7) 1. பிரித்தானியர் இந்தியாவில் தமது ஆதிக்கத்தை பரப்ப மேற்கொண்டு நடவடிக்கைகள் இரண்டை குறிப்பிடுக?

2. இந்திய தேசிய சங்கத்தின் குறிக்கோள்கள் இரண்டினை எழுதுக?

3. இந்திய சுதந்திரப் போராட்டத்தில் மகாத்மா காந்தியின் செயல்பாடுகள் மூன்றினை குறிப்பிட்டு விளக்குக?

( 2 +4+ 6 = 12 புள்ளிகள் )


LOL.lk
BookStore
විභාග ඉලක්ක
පහසුවෙන් ජයගන්න
ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න
| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර
| A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත්
| School Book | ගුරු අත්පොත්
pesuru Prakashana Private Ltd.
Akura Pilot
සමනල දැනුම
සතර
පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට
www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න